**வேலூர் மாவட்டம்**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**<u>ந.க. எண்.1236/SMC/மாஒ6/ஒபக/2023, நாள்: 10.08.2023.</u>**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை ஆகஸ்ட் 15, 2023 கிராம சபைக் கூட்டத்தின் கூட்டப் பொருளாக இணைத்திட அறிவுறுத்தல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1680/A11/பமேகு/ ஒபக/2023, நாள்:08.08.2023.

***********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது மாதந்தோறும் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகிறது. இது பள்ளியின் தேவைகளையும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியையும் கவனத்தில் கொண்டு பள்ளி மேம்பாட்டிற்கானத் தீர்மானங்களை நிறைவேற்றிப் பள்ளியின் வளர்ச்சியை உறுதி செய்கிறது.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சி உறுதி செய்ய கிராம பஞ்சாயத்தின் நிலைக் குழுக்களில் ஒன்றான “கல்விக் குழு” செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் பள்ளி வளர்ச்சிக்கானத் தீர்மானங்களை நிறைவேற்றி கல்வியில் கிராம பஞ்சாயத்துகளின் பங்களிப்பை முழுமையாக உறுதி செய்ய முடியும். எனவே கிராமசபை கூட்டங்களில் பள்ளி வளர்ச்சி, கற்றல் கற்பித்தல், உட்கட்டமைப்பு, மாணவர் பாதுகாப்பு, பள்ளி இடைநிற்றல் மற்றும் உயர்கல்வி தொடர்பாக பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொள்வது அவசியமாகும்.

எதிர் வருகின்ற 15 ஆகஸ்ட் 2023 சுதந்திர தினத்தன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொண்டு விவாதிப்பது சம்பந்தமாக கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

**வழிகாட்டுதல்கள்:**

1. 15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் பள்ளியின் சார்பில் தலைமை ஆசிரியர், ஆசிரியர், பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
2. பள்ளி வளர்ச்சி சார்ந்த தேவைகள், கற்றல் கற்பித்தல் போன்றவை தொடர்பாக பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தொகுத்து சுதந்திர தினத்தன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு தகுந்த ஆலோசனைகளை பெற வேண்டும்.

3. கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் கிராம பஞ்சாயத்தும் மக்களும் தங்கள் பள்ளி சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து தங்களின் பங்களிப்பை அளிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.
4. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்கள் தொடர்பாக கிராம சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை / முடிவுகளை அடுத்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும்.
5. பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் கிராம சபைக் கூட்டத்திலும் பள்ளி மேலாண்மைக் குழு முதன்மை கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ள வேண்டும்.

மேற்காணும் வழிகாட்டுதல்களை பின்பற்றி 15 ஆகஸ்ட் 2023 அன்று நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பிரதிநிதிகள், பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பங்கு பெறுவதை மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி / இடைநிலை), உதவி திட்ட அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ) மற்றும் ஆசிரிய பயிற்றுநர்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

10/08/2023

10/08/23

பெறுநர்:

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக்கல்வி / இடைநிலை) தொடர் நடவடிக்கைக்காக.
2. அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு), வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டார வள மைய ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
6. பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்:

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பப்படுகிறது.
3. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

TAMILNADU SAMAGRA SHIKSHA CELEBRATION

# HAPPY INDEPENDENCE DAY

AUG 15 TUESDAY

## ஆகஸ்ட் 15, 2023 கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை பகிர்தல்

1. 15 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் பள்ளியின் சார்பில் தலைமை ஆசிரியர், ஆசிரியர், பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.

2. பள்ளி வளர்ச்சி சார்ந்த தேவைகள், கற்றல் கற்பித்தல் போன்றவை தொடர்பாக பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தொகுத்து சுதந்திர தினத்தன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு தகுந்த ஆலோசனைகளை பெற வேண்டும்.

3. கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்ட தீர்மானங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் கிராம பஞ்சாயத்தும் மக்களும் தங்கள் பள்ளி சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து தங்களின் பங்களிப்பை அளிக்க வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.

4. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்கள் தொடர்பாக கிராம சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை / முடிவுகளை அடுத்த மாத பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் பகிர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும்.

5. பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் கிராம சபைக் கூட்டத்திலும் பள்ளி மேலாண்மைக் குழு முதன்மை கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் பார்வையாளர்களாக கலந்து கொள்ள வேண்டும்.



**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம்**